**OS.22/2012 DW4: Savier Dated:15.11.2018**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை :

நான் கட்டுபடி கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் 1வது பிரதிவாதியின் அண்ணன் மகன். 1வது பிரதிவாதியின் பக்கத்து தெருவில் குடியிருக்கிறேன். நான் யாரிடமும் கடன் வாங்கவில்லை. என் அப்பா கடன் வாங்கியதற்கு வீட்டு பத்திரம் கொடுத்தார். பாண்டில் கையெழுத்து போட்டு என் அப்பா கடன் பெற்றார். சங்கர் என்பவர் பாகாயத்தை சேர்ந்தவர். அவரை தெரியும். பி.த.சா.ஆ-1ல் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை. பி.த.சா.ஆ-1 எழுதும் போதோ பதிவு செய்யும் போதோ நான் போகவில்லை. கடன் கேட்டது எனக்கு தெரியும். பால்ராஜ் கிரய ஒப்பந்தம் தான் எழுதிக்கொடுத்தார் என்றும் வழக்கிற்காக கடன் பத்திரம் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.த.சா.ஆ.1 பத்திரம் ரத்து செய்ததில் பி.த.சா.ஆ-2ல் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை. சார்லஸ் என்பவரிடம் பணம் வாங்கி கடனை பைசல் செய்தார். அந்த பத்திரத்தை நான் பார்த்திருக்கிறேன். அந்த பத்திரத்தில் வட்டி எழுதப்பட்டுள்ளதா என்பது எனக்கு தெரியாது. வழக்கு கிரய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். கிரய ஒப்பந்தத்தில் செண்ட்க்கு என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் இந்த கிரய ஒப்பந்தத்திற்காக 1. 1/2 லட்சம் ரூபாய் வாங்கினார்கள். மீதி தொகைக்கு 6 மாத தவணை போட்டு இந்த பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது. பத்திரம் எழுதும்போது தேவசகாயம் இல்லை. தேவசகாயம் கையெழுத்து வாங்கி கிரய பத்திரம் எழுதவதாக அந்த கிரய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதில் சார்லஸ் , சதாசிவம் ஆகியோர் கையெழுத்து போட்டார்கள்.

சார்லஸ்கும் எனக்கும் விரோதம் இல்லை. கிரய ஒப்பந்ததிற்காக நான் வாதியிடம் 5000 ரூபாய் வாங்கவில்லை. பி.த.சாஆ.1 முதல் 4 ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றும் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.